பிஸ்மில்லாஹி.

# THE HOLY KORAN.

(FIRST PART.)

பரிசுத்த வேதமாகிய

# கொரான்ஷரீபு.

முதலாவது

518
4.15

## அலிபு லாம் மீம் ஜுஸு மட்டும்.

முற்றிலும்

உள்ளது போல்

வழுத்தூர் பாலிய முஸ்லிம் சங்கத்தாரின்
முயற்சியைக்கொண்டு

தஞ்சை ஜில்லா அய்யம்பேட்டைக்கு
அடுத்தவழுத்தூரிலிருக்கும்

மவுலானுமஷாயகு

அ. முஹம்மத்தாஹிர் சாயபு,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு,

தஞ்சை

விட்டி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1915.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 NOV 1915
MADRAS.

97
N15
171841

பிஸ்மில்லாஹி.

# THE HOLY KORAN.

( FIRST PART. )

பரிசுத்த வேதமாகிய

# கொரான்ஷரீபு.

முதலாவது

## அலிபு லாம் மீம் ஜுஸு மட்டும்.

முற்றிலும்

உள்ளது போல்

வழுத்தூர் பாலிய முஸ்லிம் சங்கத்தாரின்

முயற்சியைக்கொண்டு

தஞ்சை ஜில்லா அய்யம்பேட்டைக்கு

அடுத்தவழுத்தூரிலிருக்கும்

மவுலானுமஷாயகு

## அ. முஹம்மத்தாஹிர் சாயபு,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு,

தஞ்சை

விட்டி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1915.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 NOV 1915
MADRAS

518
4.15

OFFICE OF THE REGISTRAR OF SOCIETIES
10 NOV 1915
MADRAS.

# ஓர் விண்ணப்பம்.

இதில் முதலாவது அலிபுலாம்மீம் ஜுஸுமட்டும் முற்றிலும் உள்ளதுபோல் மொழிபெயர்த்திருக்கிறது. இதை போலவே இதற்கடுத்த இரண்டாவது ஸயக்கூல் ஜுஸுவும் மொழி பெயர்த்து வருகிறது. அதுபோலவே மற்ற ஒவ்வொரு ஜுஸுவும் ஒன்றுக்குப்பின் ஒன்ருக மொழி பெயர்த்து அச்சிடப்படும். இவ்வாருக முப்பது ஜுஸுவும் முடிந்த பின்னர் ஒவ்வொரு ஜுஸுவுக்கும் அதின் தபுசிராகிய விரித்துரைகளை மொழி பெயர்த்து அச்சிடப்படும்.

எந்த ஜாதியார் தன் வேதத்தைத் தம் சொந்தப் பாஷையில் வாசித்துணரவில்லையோ அவர்களில் கல்வி நாகரீகம் செல்வம் சன்மார்க்கம் குறைந்தேயிருக்கும். ஏனென்ருல் வேதமானது மனிதர்களின் சீர்திருத்தத்திற்காகவே வந்தது. அதிலும் அதிக முக்கியமாக மனிதன் மோட்சமடையும் வழியை உபதேசிக்கின்றது. இந்தப் பெரிய விஷயங்களை தன் சொந்தப் பாஷையில் உணராத ஜாதியார் எப்படிக் கடைத்தேறுவார்கள் அவர்கள் எவ்வளவு ஆசையுடன் உலமாக்களிடத்தில் விசாரணை செய்தாலும் வேதவாக்கியத்திலுள்ள அதிக நுட்பமான இரகசியங்களை படிப்பில்லாதவர்களிடத்தில் எப்படிச் சொல்வார்கள்? கதையும் காரணத்தையும் இன்பமாகச் சொல்லிக்காட்டுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியுண்டா? உண்மையையுணர சக்தியில்லாதவர்களிடத்தில் உண்மையை மறைப்பதே அவசியமென்று எண்ணுகிருர்கள். ஆகவே ஒவ்வொருவரும் தன் சொந்தத்தில் தன் சொந்தப்பாஷையைக் கொண்டு வேதத்தையுணராத வரையில் சந்தேகம் நீங்காது. படிப்பில்லாதவனிடத்தில் ஒரு பிரமதஸ்தன் இஸ்லாமதத்தைக் கேட்டால் தாங்கள் கதையைப்போலக் கேட்டுப்பாடமிட்டிருப்பதைச் சொல்லிக் காட்டுகிருர்கள். அதின் அந்தரங்கமென்னவென்று கேட்டால் இஸ்லாமார்க்கத்தைச் சொல்லி விபரித்து சந்தேகத்தை நிவர்த்தி செய்ய ஏலாமல் மயங்குகிருர்கள்.

---

ஜுஸு—பாகம்

உலமாக்கள்—கல்விவான்கள்.

804/2917.5

இவர்கள் கொரானையறிந்திருந்தால் கொரானைக்கொ
மனதை திருப்தி செய்யக்கூடும். ஆதலின் நம் எல்லாருக்கும் நாயக
கொரானையறியும் அறிவைக் கொடுப்பானாக.

இன்னம் மனிதன் தவருடையவன் இதில் ஏதாவது தவறிருந்தால் எச்சரிக்கை செய்யும் கனவான்களுக்கு நாம் நன்றி செலுத்துவதோடு இரண்டாமுறை அச்சிடும்போது திருத்தி அச்சிடுவோம். இந்தக் காரியம் முடிவு பெறுவதற்கிடையில் இதற்கு இடையூறாக யாதொரு அசந்தர்ப்பம் நேரிடாமலிருக்க நாயனிடம் இறந்து கேள்க்கின்றேன். மேலும் முஸ்லிம் சகோதரர்களின் துஆவாகிய பிரார்த்தனையையும் கோருகிறேன் ஆமீன்.

ஒரு பாஷையை நம் பாஷையில் உள்ளதுபோல் மொழிபெயர்க்கிறதாயிருந்தால் நம்பாஷைக்கு சற்று பேதப்படுவது சகஜமாகும் ஏனென்றால் நம்பாஷைக்கு அனுவிஷயமான பதங்களை அதில் சேர்த்து மொழிபெயர்க்கவேண்டியதாயிருக்கிறது. இல்லாவிட்டால் உள்ளது போல் மொழி பெயர்ப்பாகாது. அன்றி நம் பாஷை நடையை முற்றிலும் அனுசரிக்கிறதாயிருந்தால் சில இடங்களில் கருத்து பேதகப்படுகிறதாகவுமிருக்கிறது. தவிர அன்னிய பாஷையிலுள்ள நிறுத்தல் குறிகளை நம்பாஷையில் வேறிடங்களில் பாவிக்கும்படி நேரிடுகின்றது. அதினாலும் சில இடங்களில் கருத்து பேதப்படுகிறதாயிருக்கிறது. ஆதலின் கருத்துப் பிசகாமல் விளங்கும்படிக்கு மாத்திரம் உள்ளதுபோல் மொழி பெயர்ப்பதே உசிதமாகும். இல்லாவிடில் அதின் விஸ்தீரணமான கருத்துக்குப் பங்கம் நேரிடுமென்றே விடப்பட்டது.

சுத்தத்தமிழ் பதங்களையே பாவித்து எழுதுகிறதாயிருந்தால் இஸ்லாமானவர்களில் அநேகர் சுத்தமற விளங்கிக்கொள்ளமாட்டார்கள் இவர்களுக்குக்காக அறபுப்பதங்களை பாவித்து எழுதுகிறதாயிருந்தால் ஹிந்துக்களில் ஒருவரும் அறவேவிளங்கிக்கொள்ளமாட்டார்கள். ஆகையால் இஸ்லாமானவர்களுக்கு விளங்காத தமிழ்பதங்களுக்கு அதற்கு நேரான அறபுப்பதங்களைக் கொண்டும் ஹிந்துக்களுக்கு விளங்காத அறபுப்பதங்களுக்கு தமிழ் பதங்களைக்கொண்டும்

---

ஆமீன்—ஒப்புக்கொள்ளு

நோட்டில் நேர் நேராக விளக்கிக்காட்டப்பட்டிருக்கிறது ஏனென்றால் ஒருக்கால் நாயன் நாடுவானாகில் இவர்களும் இதையுணர்ந்து நேர்வழிபெறக்கூடும்.

இப்போது இதில் எந்தெந்த விஷயங்கள் மூடலாகத் தோற்றுகின்றதோ அவைகளும் இதில் பரிபாஷையாய் வந்திருக்கிற தனித்தனியான அச்சரங்களின் தாற்பரியமும் அத்தியாயத்தின் பெயர்களின் தாற்பரியமும் இதின் தபுசீராகிய விவரித்துரையைப் பார்க்கும்போது ஸ்பஷ்டமாய் விளங்கும்.

இந்த வேதத்தில் எல்லா வேதத்தின் சங்கதிகளும் வந்திருப்பதால் இந்த வேதத்தின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொருவர் கையிலும் இருப்பது அவசியமாகும் இதை ஆழ்ந்த கருத்தை கொண்டு நோட்டமிடுபவர்கள் நேர்வழி பெறுமலிரார்கள். ஆகவே ஒவ்வொருவரையும் இதின் ஒவ்வொரு பாகத்தையும் வாங்கி நோட்டமிடும்படி வர்புர்த்துகிறோம்.

இங்ஙனம்

வழுத்தூர் பால்ய முஸ்லிம் சங்கத்தின்

லெக்ச்சரரும், மெம்பருமாகிய,

அ. செய்யது குலாம் றெசூல் சாயபு,

முஸ்லிம் சகோதரர்களே!

நாமெல்லாரும் நம்சொந்தபாஷையில் குருஆன் முற்றிலும் வாசித்துணராமலிருக்கக்கூடாது. ஏனென்றால் அதில் எல்லாவிஷயங்களையும் அல்லாகுத்தஆலா நமக்குப்போதுமான வரையில் விபரித்திருக்கிறான். இதன் தபுசீர்யென்னும் விரித்துரைகளில் கிஸ்ஸாவென்னும் கதைகளையுணர்ந்தவர்கள் கிஸ்ஸாவாகவே விரித்துரைக்கிறதும், மன்திக்குமஆனிக்காரர்கள் மன்திற்குமஆனியாய் விரித்துரைக்கிறதும் பிலஸொபக்கள் பிலாஸொபியையே விரித்துரைக்கிறதும் பிக்கு குக்காரர் பிக்குகையே விவரித்துரைக்கிறதும் மகரிபாக்காரர்கள் மகரிபாவாகவே விரித்துரைக்கிறதும் இவ்விதம் எந்தெந்தக் கல்விகளில் தேர்ந்திருக்கிறார்களோ அந்தந்தக் கல்விகளையே தபுசீராகச் செய்திருப்பதால் நாம் எல்லோரும் குருஆன் நமக்கு போதித்திருக்கிற அரபுமொழியர்த்தத்தை நமது பாஷையாகிய தமிழ்நடைக்கு நேராக மொழி

பெயர்த்து அறபுபாஷையைக் கற்கும் மாணுக்கர்கள் இலேசாய் அருத்தங்களையுணர்ந்துக் கொள்ளவும் முகம்மதிய மாணுக்கர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் இதையும் ஓர் பாடமாக படித்துணர்வதற்கும் மற்ற முஸ்லிம்கள் யாவர்களும் வேதத்தையுணர்ந்து கொள்ளும் பொருட்டும் குருஆன்ஷரீபில் ருக்கூகை எடுத்து ஆயத்தையுணரநாடினுல்உடனே இதைக்கொண்டு நேரான அருத்தம் எந்த ஆபத்துக்கும் கஷ்டமில்லாமல் எடுத்துக்கொள்வதற்கும் வழுத்தூர் மவுலானு செய்யது முகம்மதுதாஹீர் ஷாகுகாதிரியவர்களை எங்கள் சங்கத்தார் அனவரும் கேட்டுக்கொண்ட நிமித்தம் தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றது அல்லாகுத்த ஆலா அவர்களுக்கு துனியாவிலும் ஆகிறத்திலும் நற்கிறுபை செய்வானுக ஆமீன்.

இங்ஙனம்
பாலிய முஸ்லிம் சங்கத்தின்
லெக்ச்சரரும் மெம்பரருமாகிய
ச. பக்கீர் முகம்மது சாயபு,

முஸ்லிம் சகோதரர்களே! இதற்கடுத்தஇரண்டாவதுபாகமாகிய ஸயக்கூல்ஜ ஸ அச்சிலிருக்கிறது. மூன்ருவது பாகமாகிய தில்க்கர் ரசூல்ஜ ஸ மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றது. இவ்விதமே ஒன்றின்பின் ஒன்றுய் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும். இவ்விதம் வெளியாகிவரும் காப்பிகளடங்கலையும் வாங்கி பார்க்கும் கனவான்களுக்கு அநேகமாய் கொருன் ஷரீபின் மகுதிவக்கருத்துகள் வெளியாகும்.

சையதுகுலாம் ரெசூல்சாயபு,
வழுத்தூர் போஸ்ட்டு, அய்யம்பேட்டை,
தஞ்சாவூர் ஜில்லா.

# THE HOLY KORAN 1st PART.

பரிசுத்தவேதமாகிய

# கொரான்ஷரீபு

முதலாவது

## அலிபு லாம் மீம் ஜுஸூ மட்டும்.

### சூரத்துல் பாத்திஹா.

பிஸ்மில்லாஹிற்றகுமானிற்றகீம்.

அல்லாவுடைய நாமத்தைக் கொண்டே ஆரம்பம். மிகக்கிருபையுள்ளவன்மகாகருணையுடையவன்.

1. ரு. 1. புகழெல்லாம் அல்லாவுக்கே உலகத்தாரை போஷிக்கிறவன்.

2. மிகக்கிருபையுள்ளவன். மகாகருணையுடையவன்.

3. உலக முடிவு நாளைக்கு எஜமான்.

4. உன்னை வணங்குகிறோம் இன்னம் உன்னிடத்திலே உதவி தேடுகிறோம்.

5. எங்களுக்கு நேர்வழிகாட்டு.

6. நீ செல்வமளித்தவர்கள் பாதையை.

7. நீ கோபமானவர்கள் பாதையல்ல இன்னம் வழிதப்பினவர்கள் பாதை வேண்டாம்.

ஒப்புக்கொள்ளு.

### சூரத்துல்பக்கர்.

அல்லாவுடையநாமத்தைக்கொண்டே ஆரம்பம் மிகக்கிருபையுள்ளவன் மகாகருணையுடையவன்.

1. ரு. 1. அலிபு லாம் மீம் இந்தக்கிதாபில் சந்தேகமில்லை நேர்வழிகாட்டும்பரிசுத்தவான்களுக்கு

2. மறைவைக்கொண்டு ஈமான் கொண்டவர்களுக்கு இன்னம் தொழுகையை நிலைபாடாக்குகிறவர்களுக்கு இன்னம் நாம் அவர்களுக்கு கொடுத்ததில் நின்றும் சிலவு செய்கிறவர்களுக்கு

---

சூரத்துல்பாத்திஹா—பாத்ஹாவென்னும் அத்தியாயம்.

சூரத்துல்பக்கர்—பக்கரென்னும் அத்தியாயம். கித்தாபு—வேதம்.

அலிபு லாம் மீம்—பரிபாஷையான மூன்று அச்சரங்கள்.

3. இன்னம் உம்பேரில் இறக்கிவைத்ததைக்கொண்டும் ஈமான்கொள்கிறவர்களுக்கு இன்னம் உமக்கு முன்இறக்கிவைத்ததைக்கொண்டும் இன்னம் உலக முடிவுநாளைக்கொண்டும் நம்புகிறவர்களுக்கு.

4. தம்முடைய நாயகனைக்கொண்டும் இவர்கள்நேர்வழியிலிருக்கிறார்கள் இன்னம் இவர்களே ஈடேத்தம் பெறுகிறவர்கள்.

5. உண்மையாக காபிரானவர்களுக்கு நீர் அச்சம் பூட்டுவதும் அல்லது அச்சம் பூட்டாமலிருப்பதும் சமமாயிருக்கும் அவர்கள் ஈமான் கொள்ளார்கள்.

6. அல்லாகுத்த ஆலா அவர்கள் இருதயங்களின் பேரில் முத்திரைபோட்டுவிட்டான் இன்னம் அவர்கள் காதின் பேரிலும் அவர்கள் கண்கள் பேரிலும் திரையுண்டாயிருக்கிறது இன்னம் அவர்களுக்குப்பெரிய வேதனையுண்டாயிருக்கிறது.

2. ரு. 1. இன்னம் மனிதரில் நின்றும் எவர்கள் நாங்கள் அல்லாவைக் கொண்டும் இன்னம் ஒடுக்கத்து நாளைக் கொண்டும் ஈமான் கொண்டோமென்று சொல்லுகிறார்களோ இன்னம் அவர்கள் ஈமான்கொள்கிறவர்களல்ல.

2. அல்லாவை இன்னம் ஈமான் கொண்டவர்களைஏமாத்துகிறார்கள் இன்னம் அவர்கள் ஏமாத்தவில்லை தங்கள் ஆத்துமாவையேயொளியமேலும் அவர்கள் அறியவில்லை.

3. அவர்கள் இருதயங்களில் பிணியுண்டாயிருக்கிறது ஆகையால் அல்லாகுத்தஆலா பிணியை அவர்களுக்கு அதிகப்படுத்தி விட்டான் இன்னம் அவர்களுக்கு வருத்தமானவேதனையுண்டாயிருக்கிறது ஏனெனில் அவர்கள் பொய்செல்லுகிறவர்களாயிருந்தார்கள்.

4. இன்னம் பூமியில் கலகஞ்செய்ய வேண்டாமென்று அவர்களுக்குச் சொல்லப்படுமானால் நாங்கள் சமாதானஞ்செய்கிறவர்களாயிருக்குமென்று சொல்லுகிறார்கள்.

5. பத்திரம் உண்மையாக அவர்களே கலகஞ்செய்கிறவர்களாயிருக்கும் ஆனால் அவர்கள் அறியவில்லை.

6. இன்னம் மனிதர்கள் ஈமான் கொண்டது போல அவர்களை ஈமான் கொள்ளச்சொல்லப்படுமானால் மூடர்கள்ஈமான் கொண்டதுபோல நாங்கள் ஈமான் கொண்டுவருகிறதா வென்று சொல்வார்கள் பத்திரம் உண்மையாக அவர்களே மூடர்களாயிருக்கும். எங்கிலும் அவர்கள் அறியவில்லை.

7. இன்னம் ஈமான் கொண்டவர்களைச் சந்திக்கிறபொழுது நாங்கள் ஈமான் கொண்டோமென்று சொல்கிறார்கள் இன்னம் அவர்கள் தலைமைக்காரர்களுட

ஈமான்—விசுவாசம். காபிர்—மாறுசெய்பவர்கள்.

ன் தனிக்கிறபோது. உண்மையாக நாங்கள் உங்களுடனுயிருக்கும் நாங்கள் பரியாசஞ் செய்கிறத்தைத்தவிர அல்லவென்று சொல்லுகிருர்கள்:

8. அல்லாகுத்தஆலா அவர்களைக்கொண்டும் கேலிபண்ணுகிருன் இன்னம்அவர்களுடைய மாறுபாட்டில் அவர்களை இழுக்குருன் அவர்கள் மயங்குகிருர்கள்.

9. இவர்கள் நேர்வழிக்கு பதிலாக வழிகேட்டை வாங்கினவர்களாயிருக்கும் பின்பு அவர்களின் வியாபாரம் நயங் கொடுக்கவில்லை இன்னம் அவர்கள் நேர் வழிபெறுகிறவர்களாக வில்லை.

10. செவிடர்களாய் ஊமையர்களாய் குருடர்களாயிருக்கும் பின்பு அவர்கள் மீளவில்லை.

11. அவர்களுக்கு உவமையாவது அக்கினியை மூட்டுகிறவனின் உவமை போலாயிருக்கும் பின்பு அவனைச்சுற்றிலுமிருந்ததையெப்பொழுது அது துலக்கமாக்கிவைத்ததோ அவர்கள் ஒளிவை அல்லாகுத்தஆலா கொண்டு போய் விட்டான் இன்னம் அவர்களை யிருட்டில் விட்டு விட்டான் அவர்கள் பார்க்கவில்லை.

12. அல்லது எவ்விதம் வானத்தில் நின்றும் மேகத்தில் இருளும் குமுரலும் மின்னலுமுண்டாகியிடிமுளக்கத்தைக்கொண்டும் மரணத்தின் அச்சத்தால் தங்கள் விரல்களை அவர்கள் செவிகளில் வைத்துக்கொள்ளுகிருர்களோ இன்னம் அல்லாகுத்தாஆலா அக்காபிர்களைச்சூழ்ந்துகொள்ளுகிறவனுயிருக்கும்.

13. மின்னல் அவர்கள் பார்வைகளை லாவிக்கொள்ள முடிகிவிட்டது எப்பொழுதுஅவர்களுக்கு வெளிச்சமாகின்றதோ அதில் நடக்கிருர்கள் இன்னம் எப்பொழுது அவர்கள் மீதுஇருளாகின்றதோ நின்றுகொள்ளுகிருர்கள் இன்னம் அல்லாகுத்தஆலா நாடுவாளுகில்அவர்கள் கேள்விகளையும் பார்வைகளையும் அவசியம் கொண்டுபோய் விடுவான் உண்மையாகஅல்லாகுத்தஆலா சகல வஸ்துக்களின்மேரிலும் தத்துவமுடையவனுயிருக்கிருன்.

3. ரு. 1. மனிதர்களே நீங்கள்பரிசுத்த மாவதற்கு உங்களையும் உங்களுக்குமுன்னுள்ளவர்களையும் படைத்த உங்கள் நாயனை வணங்குங்கள்.

2. அவனுகிறவன் உங்களுக்கு பூமியை விரிப்பாகவும் வானத்தை முகடாகவுமாக்கினுன் இன்னம் வானத்தில் நின்றும் தண்ணீரையிறக்கி பின்புஅதைக்கொண்டும் பழவர்க்கங்களாக உங்களுக்குத் தீனியை வெளிப்படுத்தினுன் ஆகையால் அல்லாவுக்கு இணை செய்யாதீர்கள் இன்னம் உங்களுக்கே தெரியும்.

3. இன்னம் நாம் நமது அடியார்கள்மீது இறைக்கி வைத்ததை

கொண்டும் நீங்கள் சந்தேகத்
தில் ஆயிருப்பீர்களாகில்பின்பு
நீங்கள் உண்மையாளர்களா
யிருந்தால் அதைப்போல் ஒரு
சூரத்து கொண்டுவாருங்கள்
இன்னம் அல்லாவைத்தவிர உ
ங்கள் சாக்ஷிகளை கூப்பிட்டுக்
கொள்ளுங்கள்.

4. பின்பு நீங்கள் செய்யாவிடில்
இன்னம் நீங்கள் ஒருக்காலும்
செய்யமாட்டீர்கள் ஆகையால்
அந்நெருப்பைக்கொண்டும்பயந்
துகொள்ளுங்கள் அதற்குக்கல்
லுகளும்மனிதர்களும் விரகாயி
ருக்கிறார்கள் காபிர்களுக்காகத்
தயார் செய்யப்பட்டிருக்கிறது.

5. இன்னம் ஈமான்கொண்டவர்
களுக்கும் நல்ல செயல் செய்த
வர்களுக்கும் சுபசெய்திசொல்
லும் அதாவது அவர்களுக்கு
சொற்கமுண்டு அதற்குக்கீழ்நதி
யோடும் எப்பொழுது அதில்
நின்றும் கனிவர்க்கங்கள் தீனி
யாகக்கொடுக்கப்படுமோ அதை
முன்கொடுக்கப்பட்டிருக்கிறோ
மென்று சொல்லி இன்னம்ஒன்
றுக்கொன்று உவமைகொண்டு
வருவார்கள் இன்னம் அவர்க
ளுக்கு அதில் பரிசுத்தமான
பெண்களுண்டு இன்னம் அவர்
கள் அதில் எப்போதுமிருப்பா
ர்கள்.

6. உண்மையாக நாயன் ஒரு
கொசு அல்லது அதற்கு மே
லானதை உதாரணஞ்சொல்ல
வெள்கிக்கிறதில்லை ஆனால் எவ
ர்கள் ஈமான்கொண்டார்களோ
தங்கள்நாயனில்நின்றும் அது
நிசமாயிருக்குமென்று தெரிந்
துக்கொள்வார்கள் இன்னம் எ
வர்கள் காபிரானார்களோ நாய
ன் இந்த உதாரணத்தைக்கொ
ண்டும் என்ன நாடியிருக்கிறா
னென்று சொல்லுவார்கள் இ
தைக்கொண்டு அநேகர்களை
வழிகெடுக்கிறான். இன்னம் இ
தனால் வெகுபேர்களுக்கு வழி
காட்டுகிறான் இன்னம் இதை
க்கொண்டு பாவிகளைத்தவிர வ
ழிகெடுக்கவில்லை அவர்கள் நா
யனின் சொல்லை அவனுக்கு
உறுதிசெய்தபின்முறிக்கிறார்க
ள் இன்னம் நாயன் சேர்த்துக்
கொள்ள உத்திரவு செய்ததை
அதைக்கொண்டு முறித்து வி
டுகிறார்கள் இன்னம் பூமியில்
கெடுதல் செய்கிறார்கள் இவர்க
ள் நஷ்டவாளிகளாயிருக்கும்.

7. எவ்விதம் நாயனைக்கொண்டு
மாறுசெய்கிறீர்கள். இன்னம்
நீங்கள்சவமாயிருந்தீர்கள் பின்
பு உங்களை உயிராக்கினான் பி
ன்பு உங்களை சவமாக்குவான்
பின்பு உங்களைஉயிராக்குவான்
பின்பு அவன் பாருசமே மீளு
வீர்கள்.

8. அவனாகிறவன் பூமியிலுள்ள
எல்லாவற்றையும் உங்களுக்கு
படைத்தான். பின்பு வானத்தி
ன்புரம் நோக்கி மேலும்அவை
களையேழுவானங்களாக ஒழுங்
குப்படுத்தினான் இன்னம் அ
வன் சகல வஸ்துக்களையும் அ
றிகிறவன்.

4. ரு. 1. இன்னம் உம்முடைய நாயன்மலக்குகளுக்கு உண்மையாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியுண்டாக்குவேனெனச் சொன்னபொழுது அதில் தீங்குசெய்கிரவரையும் அதில் இரத்தம் சிந்துகிறவரையும் உண்டாக்குகிறுயா? இன்னம் நாங்கள் உன்புகழைக்கொண்டு துதிக்கிறோம் இன்னம் நாங்கள் உன்னையே துய்தாக்குகிறோமென கூறினர்கள் உண்மையாக நீங்கள் அறியாதவைகளை நான் அறிவேனெனச்சொன்னான்.

2. இன்னம் ஆதத்திற்கு எல்லா நாமங்களையும் படிப்பித்து பின்பு மலக்குகளுக்கு முன் எதிராக்கி மேலும் நீங்கள் உண்மையாளராயிருந்தால் அவர்களின் நாமங்களை யெனக்குக்காட்டுங்களெனச்செப்பினன்.

3. நீ பரிசுத்தமானவன் நீ எங்களுக்கு அறிவித்ததைத் தவிர எங்களுக்கு ஞானமில்லை உண்மையாக நீயே அறிகிறவன் தந்திரமுடையவனெச் சொன்னார்கள்.

4. ஆதமே அவர்களுக்கு அவர்களின் நாமங்களைக் காட்டுமெனச்சொன்னான். பின்புஎப்பொழுது அவர்களுக்கு அவர்களின்நாமங்களைக்காட்டினரோ உண்மையாக நான் வானத்தின் இன்னம் பூமியின் மறைவானவைகளை அறிவேனெனவும்நீங்கள் வெளியாக்கு வதையும் மறைத்திருப்பதையும் அறிவேனெனவும் உங்களுக்குச்சொல்லவில்லையா வென்றான்.

5. இன்னம் நாம்மல்க்குகளுக்கு ஆதத்துக்கு சாஷ்டாங்கம் செய்யுங்களெனச் சொன்னபொழுது பின்பு சாஷ்டாங்கஞ் செய்தார்கள் ஷைத்தானைத் தவிர இன்னம்பெருமைபடித்து ஒப்புக்கொள்ளவில்லை இன்னம் காபிர்களில் நின்றுமாயிருந்தான்

6. இன்னம் நாம் ஆதமே நீரும் உம்முடைய மனைவியும் சொற்கத்தில் இரும் இன்னம் அதில் நின்றும் எங்கு இருவரும் நாடுகிறீர்களோ திருப்தியாகப்புசியுங்கள் இன்னம் இம்மரத்துக்கு இருவரும் முடுகவேண்டாம் பின்பு அனியாயகாரரில்நின்றுமாய் விடுவீர்களென்று சொன்னோம்.

7. பின்பு ஷைத்தான் அதில்நின்றும் அவர்கள் இருவரையும் ஏமாத்தி பின்பு அவர்கள் இருந்ததில் நின்றும் அவர்கள் இருவரையும் வெளிப்படுத்தினன் இன்னம் நாம் சொன்னோம் இறங்குங்கள் நீங்கள் சிலர் சிலருக்கு பகையாயிருக்கும் இன்னம் உங்களுக்கு பூமியில் தரிபாடுண்டா யிருக்கிறது இன்னம் சிலகாலம் வரையில் பிரயோசனமாயிருக்கும்.

8. பின்பு ஆதம் தன் நாயனில் நின்றும் சிலவார்த்தைகளைக்கற்

மலக்குகள்—வானவர்கள்.
ஆதம்—ஆதிமனுஷன்

சாஷ்டாங்கம்—ஸஜூதா
ஷைத்தான்—பூதம்

றுக்கொண்டார் பின்பு அவர் பேரில் மன்னித்தான் உண்மையாக அவனுகிறவன் மன்னிக்கிறவன் இறக்கமுடையவன்.

9. நாம் சொன்னேம் இதைவிட்டும் எல்லாரும் இறங்குங்கள் பின்பு என்னில் நின்றும் அவசியம் உங்களுக்கு நேர் வழிவந்தால் பின்பு எவர்கள் என்நேர்வழியைத் துயர்ந்தார்களோ பின்பு அவர்கள் பேரில்பயமில்லை இன்னம் அவர்கள் துக்கிக்கமாட்டார்கள்.

10. இன்னம் எவர்கள் காபிராகி இன்னம் நம் அத்தாட்சிகளைப் பொய்யாக்கினர்களோ அவர்கள்நெருப்பிலிருக்கிறவர்கள் அவர்கள் அதில்எப்போதுமிருப்பார்கள்.

5. ரு. 1. இஸ்ருயீலின் புத்திரர்களே நான் உங்கள் பேரில் அளித்த என் பாக்கியத்தையாபுகழ்செய்யுங்கள் இன்னம் என் வாக்கை நிறைவேற்றுங்கள் நான் உங்கள்வாக்கைநிறைவேற்றுவேன் இன்னம் எனக்கே பயந்து கொள்ளுங்கள்.

2. இன்னம்நான் இறக்கினதைக் கொண்டும் ஈமான் கொள்ளுங்கள் உங்களோடிருப்பதை நிசமாக்குகிறதாயிருக்கும் இன்னம் அதைக்கொண்டும் முந்திக் காபிராகவேண்டாம் இன்னம் என் ஆயத்துக்குவதிலாக அற்பவிலையை வாங்கவேண்டாம் இன்னம் என்னைக் கொண்டே பயந்து கொள்ளுங்கள்.

3. இன்னம் மெய்யை பொய்யுடன் கலக்காதீர்கள் இன்னம் மெய்யை மறைக்காதீர்கள் இன்னம் நீங்கள் தெரிந்தவர்களாயிருக்கிறீர்கள்.

4. இன்னம் தொழுகையை தரிபடுத்துங்கள் இன்னம் ஸக்காத்துக்கொடுங்கள் இன்னம் ருக்கூசெய்கிறவர்களுடன் ருக்கூசெய்யுங்கள்.

5. மனிதர்களுக்கு நன்மையைக்கொண்டு ஏவுதீர்களா? இன்னம் உங்கள் ஆத்தாமவை மறந்து விடுகிறீர்களா? இன்னம் நீங்கள் வேதத்தை வாசிக்கிறீர்கள் நீங்கள் அறியவில்லையா?

6. இன்னம் பொறுமையைக் கொண்டும் இன்னம்தொழுகையைக்கொண்டும் உதவி தேடுங்கள் இன்னம் உண்மையாக அதானது பயமுடையவர்கள் மீதேதவிர அகத்தியம் பெரிது.

7. அவர்களாகிறவர்கள் உண்மையாக தாம் தம் நாயனை சந்திக்கிறவர்களெனவும் உண்மையாக அவனிடம் மீளுகிறவர்களெனவும் எண்ணுகிருர்கள்.

6. ரு. 1. இஸ்ராயீலின் மைந்தர்களே நான் உங்கள்பேரில் அளித்தஎன்செல்வத்தையாபுகழ்செய்யுங்கள் இன்னம் உண்மையாக நான் உங்களை உலகத்தா

---

அத்தாட்சி—ஆயத்து ஸக்காத்து—முதலின் தருமம்.
இஸ்ராயீலின் புத்திரர்—யாக்கோப்பின் மக்கள். ருக்கூகு—வணக்கத்தின்வளைவு.

ரின் பேரில்கண்ணியப்படுத்தியி
ருக்கிறேன்.

2. இன்னம் ஒரு நாளைப்பயந்து கொள்ளுங்கள் ஒரு உயிர் மற்றொரு உயிரைக்கொண்டும்கொஞ்சமும் பிரயோசனமாகாது இன்னம் அதில் நின்றும் மண்டாட்டம் ஒப்புக் கொள்ளப்படுவதில்லை இன்னம் அதில் நின்றும் பதல் வாங்கப்படுவதில்லை இன்னம் அவர்கள் உதவி செய்யப்படுவதில்லை.

3. இன்னம் எப்பொழுது நாம் உங்களை பிர்அவுன் கூட்டத்தை விட்டும் தப்பிவித்தோமோ உங்களை கெட்டவேதனை செய்து கொண்டிருந்தார்கள் உங்கள் ஆண்பிள்ளைகளை கொலை செய்து கொண்டிருந்தார்கள் இன்னம் உங்கள் பெண்பிள்ளைகளை உயிராய்வைத்துக்கொண்டிருந்தார்கள் இன்னம் இதில் உங்களுக்கு உங்கள் நாயனில் நின்றும் பெரியசோதனையாயிருந்தது.

4. இன்னம் எப்பொழுது நாம் உங்களுக்கு சமுத்திரத்தை பிளந்தோமோ பின்பு உங்களைத் தப்பிவித்தோம் இன்னம் பிர்அவுன் கூட்டத்தை அமிழ்த்திவிட்டோம் இன்னம் நீங்கள் பார்த்துக்கொண்டிருந்தீர்கள்.

5. இன்னம் எப்பொழுது நாம் மூசாவுக்கு நாற்பது இரவுவார்த்தைப்பாடுசெய்தோமோ அதற்குப்பின்நீங்கள் கன்றுக்குட்டியைப்பற்றிக் கொண்டீர்கள் இன்னம் நீங்கள் அனியாயக்காரர்களாயிருக்கும்.

6. அதற்குப்பின் நீங்கள் நன்றி செலுத்துவதற்காக உங்களைத் தொட்டும் மன்னித்தோம்.

7. இன்னம் அப்பொழுது நாம் நீங்கள் நேர்வழிபெறுவதற்காக மூசாவுக்கு வேதமும் அற்புதமும் கொடுத்தோம்.

8. இன்னம் எப்பொழுது மூசா தம் கூட்டத்துக்குச் சொன்னாரோ என் கூட்டமே நீங்கள் கன்றுக்குட்டியைப் பற்றிக் கொண்டதால் உண்மையாக நீங்கள் உங்கள் உயிர்களை அனியாயஞ் செய்துகொண்டீர்கள் ஆகையால்உங்கள் நாயனிடம் மன்னிப்புத் தேடுங்கள் பின்பு உங்கள் உயிர்களை கொன்றுகொள்ளுங்கள் இது உங்களுக்கு உங்கள் நாயனிடம்நன்மையாயிருக்கும் பின்பு உங்கள் பேரில் மன்னித்தான் உண்மையாகஅவனுகிறவன் மன்னிக்கிறவன் மிக இரக்கமுடையவன்.

9. இன்னம் எப்பொழுது மூசாவே நாங்கள் நாயனை வெளிரங்கமாக கண்ணுதவரையில் உமக்கு ஒருபோதும் ஈமான் கொள்ளோமெனறு சொன்னீர்களோ இன்னம் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்க உங்களையிடிப்பற்றிக்கொண்டது.

---

பிர்அவுன்—மிசிர் அல்லது எகிப்தேசித்தின் ஓர் இராஜன் பதல்—லெஞ்சம்

10. பின்பு நீங்கள் நன்றிசெலுத்
துவதற்காக உங்கள் மரணத்து
க்குப்பின் உங்களை எழுப்பி
னோம்.

11. இன்னம் நாம் உங்கள்பேரில்
மேகத்தை நிழலாக்கினோம் இ
ன்னம் நாம் உங்கள் பேரில்
ஹல்வாவும் பட்சியும் இறக்கி
னோம் நாம் உங்களுக்கு புசிப்
பாக்கினத்தில் நின்றும் பரிசுத்
தமானதைக்கொண்டு சாப்பிடு
ங்கள் இன்னம் நமக்கு அனி
யாயஞ்செய்யவில்லை எங்கிலும்
தங்கள் உயிர்களை அனியாயஞ்
செய்கிறவர்களாயிருந்தார்கள்.

12. இன்னம் எப்பொழுது நாம்
இந்த நாட்டில் புகுதச்சொன்
னோமோ பின்பு அதில் நின்று
ம்எங்கு நாடுகிறீர்களோ திரு
ப்தியாக புசியுங்கள் இன்
னம் வாசப்படியில் சாஷ்
டாங்கஞ்செய்தவர்களாகப்புகு
துங்கள் இன்னம் மன்னிப்பு
கேள்க்கிறதாகச்சொல்லுங்கள்
உங்கள் தவறுகளை நாம் உங்க
ளுக்கு மன்னிப்போம் இன்ன
ம் நன்மை செய்கிறவர்களுக்கு
இனி அதிகப்படுத்துவோம்.

13. பின்பு அனியாயஞ் செய்ப
வர்கள் அவர்களுக்குச்சொல்லப்
பட்டதைத்தவிர வார்த்தையை
மாத்திவிட்டார்கள் பின்பு வா
னத்தில் நின்றும் அனியாயஞ்
செய்பவர்கள்மீது பாவஞ் செ
ய்து கொண்டிருந்ததை கொ
ண்டுவேதனையைஇறக்கினோம்.

7. ரு. 1. இன்னம் எப்பொழுது
மூசாதம் கூட்டத்துக்கு தண்
ணீர் குடிப்பிக்கத்தேடினாரோ
பின்பு நாம் உம்முடையக்கம்
பைக்கொண்டு அக்கல்லை அடி
யுமென்று சொன்னோம் பின்
பு அதில்நின்றும் பனிரெண்டு
ஊற்றுக்கண் கொப்பளித்து வ
ந்தது ஒவ்வொரு மனிதர்க
ளும் தாம் குடிக்கும் துரை
யை திட்டமாகத் தெரிந்துக்
கொண்டார்கள் நாயனுடைய
புசிப்பில் நின்றும் திண்ணுங்
கள் இன்னம் குடியுங்கள் இன்
னம் பூமியில் கலகஞ் செய்து
கொண்டு திரியவேண்டாம்.

2. இன்னம் எப்பொழுது சொ
ன்னீர்களோ மூசாவே ஒரே
ஆகாரத்தின்பேரில் ஒருபோ
தும் பொறுமை செய்யோம் பி
ன்பு பூமி முளைப்பிக்கிறதில் நி
ன்றும் அதின் கீரை அதின்
வெள்ளிரிக்காய் அதின்
கோதும்பை அதின் பருப்பு
அதின் வெங்காயத்தில் நின்
றும் எங்களுக்கு வெளிப்படுத்
த உம் நாயனைகேளும் சொன்
னார் நல்ல வஸ்துவுக்கு வதிலா
கதாழ்ந்த வஸ்துவை மாத்துகி
றீர்களா? ஒரு பட்டணத்தில்
இறங்குங்கள் பின்பு உண்மையா
ய் நீங்கள் கேட்டது உங்களுக்
குண்டு இன்னம் அவர்களின்
மீது தழுமையும் வருமையும்
போடப்பட்டது. இன்னம் நா
யனின் நின்றும் கோபத்தை
பெற்றுக்கொண்டார்கள் அதா

---

தீர்க்கதரிசிகள்—நபிமாகள்

னது அவர்கள் நாயனின் அத்தாக்ஷிகளை அவசியம் மறுக்கிறவர்களாகவும் தீர்க்கதரிசிகளை ஞாயமில்லாமல் வெட்டுகிறவர்களாகவு மிருந்தார்கள் இதானதுமாறு செய்தவர்களாயும் எல்லையை மீறுகிறவர்களாயுமிருந்தார்கள்.

8. ரு. 1. உண்மையாக எவர்கள் ஈமான் கொண்டுவந்தார்களோ இன்னம் எவர்கள் எஹூதியாகவும் நஸாராவாகவும் இரண்டுக்கும்இடையிலுள்ளவர்களாகவும் ஆனார்களோஎவன் அல்லாவைக்கொண்டும் கடைசிநாளைக்கொண்டும் ஈமான் கொண்டு நல்ல அமல் செய்தானோ பின்பு அவர்களுக்கு அவர்கள் நாயனிடத்தில் கூலியுண்டாயிருக்கிறது இன்னம் அவர்கள்பேரில் பயமில்லை. இன்னம் அவர்கள் துக்கிக்க மாட்டார்கள்.

2. இன்னம் எப்பொழுது நாம் உங்களை வாக்கு வாங்கினோமோ இன்னம் உங்கள் பேரில் மலையைஉயர்த்தினோம் நாம் உங்களுக்குத் தந்ததைக்கெட்டியாகப்பிடித்துக்கொள்ளுங்கள் இன்னம் நீங்கள் பரிசுத்தமாவதற்கு அதிலிருப்பதை யாபுகஞ்செய்யுங்கள்.

3. பின்பு இதற்குப்பின் நீங்கள் திரும்பி விட்டீர்கள் உங்கள் பேரில் ஆண்டவனுடைய கருணையும் அவன் கடாச்சமுமில்லாதிருந்தால் அகத்தியம் நீங்கள்நஷ்டவாளிகளில் நின்றுமாய்விடுவீர்கள்.

4. இன்னம் சனிவாரத்தில் உங்களில் நின்றும் மிதமிஞ்சினவர்களைத் திட்டமாக நீங்கள் தெரிந்து கொண்டீர்கள் பின்பு நாம் அவர்களுக்கு தாழ்மையான குரங்காய் விடுங்களெனச்சொன்னோம்.

5. பின்பு நாம் அதை அவர்களுக்கு முன்னிருப்பவர்களுக்கும் அவர்களுக்குப்பின் இருப்பவர்களுக்கும் திடுக்கமாகவும் பரிசுத்தவான்களுக்கு உபதேசமாகவும் ஆக்கினோம்.

6. இன்னம் மூசா தம்முடைய கூட்டத்துக்கு உண்மையாக நாயன் உங்களை ஒரு காளை அறுக்க ஏவுகிறானென்று சொன்னபொழுது எங்களைபரியாசஞ் செய்கிறீராவென்று சொன்னார்கள் நான் மூடர்களினின்றும் ஆவதை விட்டும் நாயனிடம் கார்மானம் தேடுகிறேனென்றுசொன்னார்.

7. அது எப்பேற்கொற்றதெண எங்களுக்கு விபரிக்கும்படி உம்முடைய நாயனை எங்களுக்காகக்கேளுமெனச் சொன்னார்கள் திட்டமாக அதுவாகிறது

---

எஹூதி—யூதர் நஸாரா—கிறிஸ்த்தர்

அமல்—செயல்

ஒரு மாடாயிருக்கும் கிழுமு மல்ல இளசுமல்ல இதற்கிடையில்நடுத்தரமானதென திட்டமாக அவன் சொல்லுகிறுன் ஆகையால் உங்களுக்கு ஏவப்பட்டதைச் செய்யுங்களென்று சொன்னுர்.

8. அதின் நிறமென்னவென எங்களுக்கு விபரிக்கும்படி உம்முடையநாயனைஎங்களுக்காகக் கேளுமெனச்சொன்னுர்கள் உண்மையாக அதுவாகிறதுநல்ல மஞ்சள்நிறமானமாடு அதின் நிறமானது பார்ப்பவர்களை சந்தோஷப்படுத்துமெனஉண்மையாகஅவன்சொல்லுகிறுனென ச்சொன்னுர்.

9. உண்மையாக அந்தமாடாகிறது எங்கள்பேரில் சந்தேகமாகிவிட்டது அது எப்பேற்கொற்றதென எங்களுக்கு விபரிக்கும்படி உம் நாயகனை எங்களுக்காகக்கேளும் இன்னம் உண்மையாக அல்லா நாடுவாருகில் நாங்கள்அகத்தியம்நேர்வழி பெறுவோமென்று சொன்னுர்கள்.

10. உண்மையாக அந்த மாடாகிறது பூமியைக்கிறி உழுகிறதுமல்ல கொல்லைக்குத் தண்ணீர் இறைக்கிறதுமல்ல சேமமானது அதில் புள்ளியில்லையென திட்டமாக அவன் சொல்லுகிறுன்னெனச் சொன்னுர் இப்பொழுதுதான் நிசத்தைக்கொண்டு வந்தீரெனச் சொன்னவர்களாக உடனே அதை அறுத்தார்கள் மேலும் செய்ய சமீபித்தவர்களாக இருந்ததில்லை.

9. ரு. 1. இன்னம் எப்பொழுது ஒரு உயிரைக்கொண்டீர்களோ பின்பு அதில் வாதாடிக் கொண்டிருந்தீர்கள் இன்னம் நாயனுகிறவன் நீங்கள் மறைத்துக்கொண்டிருப்பதை வெளிப்படுத்துகிறவன்.

2. பின்பு நாம் அதை அதின் சிலதைக்கொண்டு அடிக்கச்சொன்னேம் இவ்விதம் நாயன் சவங்களை உயிராக்குவான் இன்னம் அவன் அத்தாட்சிகளை உங்களுக்குக் காட்டுவான் நீங்கள் அறிவதற்கு.

3. பின்பு இதற்குப்பின் உங்கள் இருதயம் கல்லைப்போல் அல்லது அதைவிட கடினமாய் விட்டது இன்னம் உண்மையாக சிலகல்லுகளினுல் அதிலின்றும் ஆறுகள் ஓடுகின்றது இன்னம் உண்மையாக சிலது அவைகளினின்றும்பிளந்து பின்பு அதில் நின்றும் தண்ணீர் வெளிப்படுகின்றது இன்னம் உண்மையாக அவைகளினின்றும் சிலது ஆண்டவனுடைய பயத்தினுல் விழுந்து விடுகின்றது இன்னம் நாயன் நீங்கள் செய்கிறதைத்தொட்டும் அறியாதவனல்ல.

4. உங்களுக்கு ஈமான் கொள்ளுவார்களென இச்சிக்கிறீர்

களா இன்னம் சந்தேகமின்
றி அவர்களில் ஒரு கூட்டமி
ருந்தார்கள் அல்லாவுடைய
சொல்லைக் கேட்பார்கள் இன்
னம் அவர்கள் அறிந்திருந்து
ம் அதைத்தெரிந்தபின்னர் அ
தை மாத்திவிடுவார்கள்.

5. இன்னம் எப்பொழுது ஈமா
ன் கொண்டவர்களைச் சந்திக்கி
றார்களோ நாங்கள் ஈமான்
கொண்டோமெனச் சொல்லு
கின்றார்கள் இன்னம் எப்பொ
ழுது சிலர்கள் சிலரோடு தனி
க்கின்றார்களோ நாயன் உங்கள்
பேரில் வெளியாக்கினதை அ
தைக்கொண்டே உங்களை உங்
கள்நாயன்முன்தர்க்கிக்கஅவர்க
ளுக்குச் சொல்லிவிடுகிறீர்க
ளா நீங்கள் உணரவில்லையா
வெனச்சொல்லுகிறார்கள்.

6. அவர்கள் அறியவில்லையா ச
ந்தேகமின்றி நாயன் அவர்கள்
மறைப்பதையும் அவர்கள் வெ
ளியாக்குவதையும் அறிவான்.

7. இன்னம் அவர்களில் சிலர்ப
டிப்பில்லாதவர்கள் வேதத்தை
யுணரவில்லை ஆசையைத்தவிர
மேலும் அவர்களில்லை தாம்
எண்ணிக் கொண்டதைத்தவிர

8. பின்பு எவர்கள் தம் கையை
க்கொண்டு வேதத்தை யெழு
துகிறார்களோ பின்னர் அதை
க்கொண்டு சொற்பவிலையைவா
ங்குவதற்காக இது நாயனிடத்
தில் நின்றும் உள்ளதெனச்
சொல்லுகிறார்களோ அவர்க
ளுக்கு கைசேதம் பின்பு தம்
கையால் எழுதினதினால் அவ
ர்களுக்கு கைசேதம் இன்னம்
அதைக்கொண்டு சமாத்தியஞ்
செய்வதினால் அவர்களுக்கு
கைசேதம்.

9. இன்னம் சில எண்ணிக்கை
யான நாளைத்தவிர எங்களை ஒ
ருபோது நெருப்புத் தீண்டா
தெனச் சொன்னார்கள் நீங்கள்
நாயனிடத்தில் வாக்கு வாங்கி
யிருக்கிறீர்களோ ஆனால் நாய
ன் தன் வாக்கை ஒருபோதும்
மாத்தமாட்டான் அல்லது நா
யன்பேரில் நீங்கள் அறியாதத்
தை சொல்லுகிறீர்களாவெனச்
சொல்லும்.

10. ஆம் யார் தீங்கை சம்பாரித்
தார்களோ இன்னம் அவர்களு
டைய தீங்கு அவர்களைச்சூழ்ந்
து கொண்டதோ பின்பு அவ
ர்களே நெருப்புக் குடையவர்க
ள் அதில் அவர்கள் எப்போது
மிருப்பார்கள்.

11. இன்னம் எவர்கள் ஈமான்
கொண்டார்களோ இன்னம் ந
ல்ல செயல் செய்தார்களோ
இவர்களே சொற்கத்துக்குடை
யவர்கள் அவர்கள் அதில் எப்
போதுமிருப்பார்கள்.

10. ரு. 1. இன்னம் எப்பொழு
து இஸ்ராயீலின் மைந்தர்களை
வாக்கு வாங்கினோமோ நாய

ளைத்தவிர வணங்காதிர்கள்தா
ய் தந்தைக்கும் சொந்தக்காரர்
களுக்கும் அனுதிகளுக்கும் ஏ
ழைகளுக்கும் உபகாரஞ்செய்
யுங்கள் இன்னம் மனிதர்களு
க்கு நன்மையானதை ஏவுங்க
ள் இன்னம் தொழுகையைத்
சரிபடுத்துங்கள் இன்னம் ஸ
க்காத்து கொடுங்கள் பின்பு
உங்களில் கொஞ்சம் பேரைத்
தவிர திரும்பி விட்டீர்கள் இ
ன்னம் நீங்கள் முகம் திருப்பு
கிறவர்கள்.

2. இன்னம் எப்பொழுது உங்க
ளை வாக்கு வாங்கினேமோ உ
ங்களுக்குள் இரத்தம் சிந்தாதீ
ர்கள் இன்னம் உங்கள் வீடுக
ளைவிட்டும் உங்களுக்குள் ஒரு
வரையும் வெளிப்படுத்தாதீர்க
ள் பின்பு நீங்கள் ஒப்புக் கொ
ண்டீர்கள் இன்னம் நீங்களே
சாட்சியானவர்கள்.

3. பின்பு நீங்களே அவர்கள் உ
ங்களுக்குள் வெட்டிக்கொள்கி
றீர்கள் இன்னம் உங்களில்
ஒரு கூட்டத்தை அவர்கள் வீ
டுகளைவிட்டும் வெளிப்படுத்து
கிறீர்கள் அவர்கள் பேரில் பா
வத்தையும் அனியாயத்தையும்
கொண்டு ஒன்றுக்கொன்று உ
தவி செய்கிறீர்கள் இன்னம்
உங்களிடம் கைதியாக்கப்பட்டு
வருவார்களாகில் அவர்களுக்
குத்நலேக்கூலிகொடுக்கிறீர்கள்
இன்னம் அதாகிறது அவர்க
ளைவெளிப்படுத்துகிறது உங்க
ள் பேரில் ஹறுமாயிருக்கிறது
பின்பு வேதத்தின் சிலதைக்
கொண்டு ஈமான் கொண்டு இ
ன்னம் சிலதைக்கொண்டு மறு
க்குறீர்களா பின்பு உங்களில்
இதைச்செய்பவர்களுக்கு உல
கஜீவிப்பில் பழிப்பைத்தவிர
என்ன கூலி இன்னம் உலக
முடிவு நாளைக்கு கடினமான
வேதனையின் புறம் திருப்பப்ப
டுவார்கள் இன்னம் நாயன் நீ
ங்கள் செய்வதைத் தொட்டும்
மறக்குகிறவனல்ல.

4. இவர்களாகிறவர்கள் மறுமை
க்கு வதிலாக உலக ஜீவிப்பை
யே வாங்கினவர்கள் ஆகை
யால் அவர்களை தொட்டும் வே
தனையை லேசாக்கப்படவும் அ
வர்கள் உதவி செய்யப்படவு
மாட்டார்கள்.

11. ரு. 1. இன்னம் நிச்சயமாக
மூஸாவுக்கு வேதத்தை கொடு
த்தோம் இன்னம் அவருக்கு
ப்பின் ரசூல்மார்களை பின்னு
ல் அனுப்பிவைத்தோம் இன்
னம் மரியத்தின் மகன் ஈசாவு
க்கு அற்புதத்தைக் கொடுத்
தோம் இன்னம் அவருக்குப்
பரிசுத்த ஆவியைக்கொண்டு
உதவி செய்தோம் பின்பு எ
ன்னஉங்கள் ஆத்மாவிரும்பாத
ஒன்றைக்கொண்டு ரசூல்

---

ஹராம்—விலக்கல்

பரிசுத்த ஆவி—ரூகுல்குதுசு.

ரசூல்—தீர்க்கதரிசி.

மார்கள் உங்களிடம் எப்பொழுது வந்தார்களோ நீங்கள் பெருமையடித்தீர்கள் பின்பு ஒரு கூட்டத்தை பொய்யாக்கினீர்கள் இன்னம் ஒரு கூட்டத்தை வெட்டுகிறீர்கள்.

2. இன்னம் எங்கள் இருதயம் திரைபோடப் பட்டிருக்கிறதென்று சொன்னார்கள் எங்கிலும் நாயன் அவர்கள் குபிரைக்கொண்டே அவர்களை முனிவு செய்தான் பின்பு கொஞ்சமும் ஈமான் கொள்ளமாட்டார்கள்.

3. இன்னம் எப்பொழுது நாயனிடமிருந்து அவர்களோடிருப்பதை நிசமாக்குகிறவேதம் அவர்களுக்கு வந்ததோ இன்னம் இதற்கு முன் காபிரானவர்களின்பேரில் வெத்தி தேடிக்கொண்டிருந்தார்கள் பின்புஎப்பொழுது அவர்களுக்கு வந்ததோ அவர்கள் அறிந்திருந்ததை அதைகொண்டு காபிரானார்கள் பின்புஅல்லாவுடையமுனிவுகாபிர்களின்பேரில் உண்டாயிருக்கிறது.

4. நாயன் தம் கிருபையால் தம் அடியார்களில் நின்றும் நாடியவர்கள் பேரில் இறக்கி வைப்பதை பகைபால் நாயன் இறக்கினதைக்கொண்டு மறுக்க அவர்களின் ஆத்மாக்கள் அதனால் வாங்கினது கெட்டது ஆகையால் கோபத்தின்பேரில் கோபத்தைப் பெற்றுக்கொண்டார்கள் இன்னம் மறுப்பவர்களுக்குகெட்டவேதனை யுண்டாயிருக்கிறது.

5. இன்னம் எப்பொழுது நாயன் இறக்கினதைக் கொண்டும் ஈமான் கொள்ளுங்களென அவர்களுக்குச்சொல்லப்படுமோ எங்கள் பேரில் இறக்கினதைக்கொண்டும் ஈமான் கொண்டோமெனச்சொன்னார்கள் இன்னம் அதற்குப் பின்னுள்ளதை மறுக்குகிறார்கள் இன்னம் அது உண்மையானது அவர்களோடிருப்பதை உண்மையாக்கிறதாயிருக்கும் பின்பு நீங்கள் ஈமானுள்ளவர்களா யிருந்தால் இதற்கு முன் நாயனின் தீர்க்கதரிசிகளை யேன் வெட்டுகிறீர்களெனக்கேளும்.

6. இன்னம் அகத்தியம் உண்மையாக மூசாவானவர் அத்தாட்சிகளைக் கொண்டு உங்களிடம் வந்தார் பின்பு அதற்குப் பின் நீங்கள் கன்றுக்குட்டியை பிடித்துக்கொண்டீர்கள் இன்னம் நீங்கள் அனியாயஞ் செய்கிறவர்களாயிருக்கும்.

7. இன்னம் எப்பொழுது நாம் உங்களிடம் வாக்கு வாங்கினோமோ இன்னம் உங்கள்பேரில் மலையை உயர்த்தினோம் நாம் உங்களுக்குக் கொடுத்ததை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள் இன்னம் கேளுங்கள் நாங்கள் கேட்டோம் இன்னம்

---

குபிரு—மாறு.
முனிவு—லஅனத்து.

நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை
யென்று சொன்னார்கள் இன்
னம் அவர்களுடைய குபிரைக்
கொண்டும் அவர்களின் இருத
யங்களில் கன்றுக்குட்டியின்
அன்பைக்குடிப்பாட்டப் பட்டி
ருந்தது நீங்கள் பக்தியுடைய
வர்களாயிருந்தால் உங்கள் பக்
தி அதைக் கொண்டு உங்களை
ஏவுகிறது கெட்டதாயிருக்கு
மென்று சொல்லும்

8. நாயனின் சமுகத்தில் மறு
மையின் வீடுமற்ற மனிதர்க
ளைத்தவிர உங்களுக்கே சொந்
தமாயிருந்தால் பின்பு நீங்கள்
உண்மையானவர்களா யிருந்தா
ல் மரணத்தை விரும்புங்களெ
ன்று சொல்லும்.

9. இன்னம் அதை எப்பவும்ஒரு
போதும் விரும்பமாட்டார்கள்
அதைக்கொண்டு அவர்களின்
கைகள் முப்படுத்தி விட்டது.
இன்னம் நாயன் அனியாயகார
ர்களை அறிகிறவன்.

10. இன்னம் ஜீவிப்பின்பேரில்
அதிக அவள் கையுடைய மனி
தர்களாக அவர்களை அகத்தி
யம் பெற்றுக்கொள்வீர் இன்
னம் இணைவைக்கிறவர்களில்
நின்றும் அவர்கள் ஒவ்வொரு
வரும் ஆயிரவருடம் வயது
கொடுக்கப்படாதாவென இச்சி
க்கிறார்கள் இன்னம் வயது
கொடுக்கப்படுவதும் அது அ
வனை வேதனையில் நின்றும் வி
டுதலை செய்யமாட்டாது இன்
னம் நாயன் அவர்கள் செய்கிற
தைக்கொண்டு பார்க்கிறவனாயி
ருக்கும்.

12. ரு. 1. யாராவது ஜிபுரீலுக்
குப்பகையாயிருந்தால் பின்பு
உண்மையாக அவராகிறவர் ஆ
ண்டவனுடைய உத்திரவுப்படி
அதற்கு முன்னுள்ளதை உண்
மைப்படுத்து மானதாகவும் ஈ
மானுடையவர்களுக்கு நேர்வ
ழியாகவும் சுப செய்தியாகவும்
அதை உம்முடைய இருதயத்
தின் பேரில் இறக்கினாரெனச்
சொல்லும்.

2. யாராவது நாயனுக்கும் அவ
ன் மலக்குகளுக்கும் அவன்
ரசூல் மார்களுக்கும் ஜிபுரீ
லுக்கும் மீக்காயீலுக்கும் பகை
யாயிருந்தால் பின்பு உண்மை
யாக நாயனாகிறவன் அக்காபிர்
களுக்குப்பகையாயிருக்கிறான்.

3. இன்னம் அகத்தியம் சந்தே
கமின்றிநாம் பிரத்தியட்சமான
ஆத்தாட்சிகளை உம்பாரிசம் இ
றக்கினோம் இன்னம் அதைக்
கொண்டும் பாவிகளைத் தவிர
மறுக்கமாட்டார்கள்.

4. எப்பொழுது அவர்கள் யா
தொரு நிபந்தனைக்குக் கட்டுப்
பட்டாலும் அவர்களில்நின்றும்
ஒரு கூட்டம் அதையெறிந்து

---

ஜிபுரீல்—தேவவசனம் கொண்டுவரும் அமரர்.

மீக்காயீல்—ஓர் அமரர்.

விடவில்லையா? எங்கிலும்அநே
கர் அவர்கள் ஈமான் கொள்
ளவில்லை.

5. இன்னம் எப்பொழுது நாய
னிடமிருந்து அவர்களுக்கு அ
வர்களோடிருப்பதை உண்மை
படுத்துமானவராக ரசூல் வந்
தாரோ வேதம் கொடுக்கப்பட்
டவர்களில் நின்றும் ஒரு கூட்
டம் நாயனுடைய வேதத்தை
தங்கள் முதுகுக்குப்பின் அவர்
கள் அறியாதவர்களைப் போல்
எறிந்து விட்டார்கள்.

6. இன்னம் சுலைமானின் அரசா
ட்சியின்பேரில் ஷைத்தான்கள்
படித்துக்கொண்டிருந்ததை
தொயந்தார்கள் இன்னம் சுலை
மான் மாறு செய்யவில்லை எங்
கிலும் ஷைத்தான்கள் மாறு
செய்தது மனிதர்களுக்கு சூனி
யத்தைப் படித்துக் கொடுக்கு
மானதாயிருந்தது இன்னம் பா
பில் தேசத்தில் ஹாரூத் இன்
னம் மாரூத்தென்ற இரண்டு
மலக்கின்பேரில் இறக்கப்பட்ட
தை இன்னம் உண்மையாக நா
ங்கள் சோதிக்கப் பட்டவர்க
ளைத் தவிர அல்லவென்று அவ
ர்கள் சொல்லாத வரையில் ஒரு
வருக்காவது இருவரும் படித்
துக் கொடுக்கவில்லை ஆகை
யால் காபிராகாதே பின்பு புரு
ஷனுக்கும் அவன் பெஞ்சாதிக்
குமிடையில் எதைக்கொண்டு
பிரிவினை செய்யப்படுமோ அ
தை அவர்கள் இருவரில் நின்
றும் கற்றுக் கொண்டிருந்தார்
கள் இன்னம் அவர்கள் அதைக்
கொண்டு ஒருவருக்காவது நா
யனின் உத்திரவின்றி தீங்கு
செய்பவர்களல்ல இன்னம் அவ
ர்களுக்குத் தீங்கு செய்யுமான
தையும் அவர்களுக்குப் பிர
யோஜனம் கொடாததையும்
படித்துக் கொண்டிருந்தார்கள்
இன்னம் அகத்தியம் சந்தேக
மின்றி எவன் அதை வாங்கினு
னே அவனுக்கு மறுமையில்
யாதொரு பிரயோஜனமில்லை
யென அறிந்தேயிருக்கிறார்கள்
இன்னம் அவர்கள் அறிந்திருந்
தால் அதற்கு வதிலாக தங்
கள் உயிர்களை வித்ததே அகத்
தியம் கெட்டது.

7. இன்னம் உண்மையாக அவர்
கள் உறுதிகொண்டு இன்னம்
பரிசுத்தமாவார்களானல் அவ
ர்கள் அறிந்திருந்தால் நாயனி
டத்தில் நின்றும் அகத்தியம்
மேலான நன்மையுண்டாயிருந்
தது.

13. ரு. 1. ஓ! ஈமான் கொண்டவ
ர்களே எங்களை கவனியுமென்
று சொல்லாதீர்கள் இன்னம் எ
ங்களை நோட்டமிடுங்களெனச்
சொல்லுங்கள் இன்னம் கேளு
ங்கள் இன்னம் காபிர்களுக்கு
வருத்தமான வேதனையுண்டா
யிருக்கிறது.

2. வேதத்தை யுடையவர்களில்
நின்றும் மாறுசெய்தவர்களும்

சுலைமான்—ஓர் அரசனான தீர்க்கதரிசி.

இணைவைத்தவர்களும் உம்முடைய நாயனில் நின்றும் உம்பேரில் யாதொரு நன்மையானவைகளை இறக்கி வைக்க பிரியப்படவில்லை இன்னம் நாயன்நாடுகிறவனை தன் கிருபையைக் கோண்டு சொந்தப்படுத்துகிறான் இன்னம் நாயன் பெரிய கடாட்சமுள்ளவன்.

3. நாம் யாதொரு ஆயத்தை மாத்தினால் அல்லது நாம் அதை மறக்க வைத்தால் அதைப்போல அல்லது அதைவிட மேலானதாகக் கொண்டு வருவோம் நீர் அறியவில்லையா உண்மையாக நாயன் எல்லா வஸ்துவின் பேரிலும் தத்துவமுடையவனாயிருக்கிறான்.

4. நீர் அறியவில்லையா உண்மையாக நாயனாகிறவன் அவனுக்கே வான்லோகம் இன்னம் பூவிலோகத்தின் இராஜாங்கமுண்டாயிருக்கிறது இன்னம் நாயனைத்தவிர உங்களுக்கு யாதொரு சினேகிதனும் உதவி செய்கிறவனுமில்லை.

5. இதற்குமுன் மூசாவைக்கேள்க்கப்பட்டது போல் உங்கள் ரசூலைக்கேள்க்க நாடுகிறீர்களா இன்னம் எவன் ஈமானுக்கு வதிலாக குப்ரை மாத்தினானே பின்பு அவன் சந்தேகமின்றி நேரான பாதையை தவற விட்டான்.

6. வேதத்தை யுடையவர்களில் நின்றும் அநேகர் அவர்களுக்கு உண்மை பிரத்தியட்சமான பிறகு உங்கள் ஈமானுக்குப்பின் உங்களை எப்படியாவது திருப்பிக்காபிராக்க அவர்கள் மனதுகளுக்கிடையில் பொறாமை செய்து இச்சிக்கிறார்களாகையால்நாயன்தன்உத்தரவைக் கொண்டு வருகிறவரையில் மன்னியுங்கள் இன்னம் பொறுத்துக் கொள்ளுங்கள் உண்மையாக நாயன் சகல வஸ்துவின் பேரிலும் தத்துவமுடையவனாயிருக்கிறான்.

7. இன்னம் தொழுகையை நியமமாக்குங்கள் இன்னம் ஸக்காத்தைக் கொடுத்துக் கொள்ளுங்கள் இன்னம் நன்மையில் நின்றும் உங்கள் ஆத்துமாவுக்காக எதை முற்படுத்துகிறீர்களோ நாயனிடம் அதைப் பெற்றுக் கொள்வீர்கள் உண்மையாக நாயன் நீங்கள் செய்கிறதைத் பார்க்கிறவனாயிருக்கிறான்.

8. இன்னம் நஸாரா அல்லது எஹூதியாயிருப்பவனைத் தவிர ஒருபோதும் சொர்க்கம் புகுதமாட்டாரெனென்று சொன்னார்கள் இதே அவர்களின் இச்சை நீங்கள் உண்மையானவர்களாயிருந்தால் உங்கள் அத்தாட்சிகளைக் கொண்டு வாருங்களென்று சொல்லும்.

9. ஆம் எவன் தன் முகத்தை நாயனுக்கு வழிப்படச் செய்தானோ இன்னம் அவன் நன்மை செய்கிறவனாயிருக்கும் ஆகையால் அவனுக்கு தன் நாயனிடத்தில் அதின்கூலியுண்டா

யிருக்கிறது இன்னம் அவர்க ளின்பேரில் பயமில்லை அவர் கள் துக்கிக்கவுமாட்டார்கள்.

14. ரு. 1. இன்னம் யூதர் கிறிஸ் தரை ஒரு வஸ்தின் பேரிலு மில்லையென்று சொன்னார்கள் இன்னம் கிறிஸ்தர் யூதரை ஒருவஸ்துவின் பேரிலுமில்லை யென்று சொன்னார்கள் இன் னம் அவர்கள் வேதத்தை வாசிக்கிறார்கள் இதுபோலவே அவர்கள் சொல்லைப்போலறி யாதவர்களும் சொன்னார்கள் ஆகையால் எதில் விதர்ப்பமா யிக்கொண்டிருந்தார்களோ அதில் ஆண்டவன் கியாமநா ளில் அவர்களுக்கிடையில் தீர் புச்செய்வான்.

2. இன்னம் எவன் நாயனு டைய மசூதிகளை அவைகளில் அவன் நாமத்தையாபுகம்செய் கிறத்தைத்தடுத்து இன்னம் அவைகளை அழிக்கிறத்தில் முயற்சித்தானே அவனை விட பெரிய அனியாயகாரன் யார் இவர்கள் தான் அவர்களுக்கு அவைகளில் பயந்தவர்களா கவேயொழியபுகுதுவது சாத் தியமாகாது அவர்களுக்கு உல கத்தில் பழிப்பும் ஆகிரத்தில் அவர்களுக்கு பெரிய வேதனை யுமுண்டாயிருக்கிறது.

3. இன்னம் கிழக்குத்திசையும் மேற்குத்திசையும் நாயனு க்காயிருக்கும் ஆகையால் நீங் கள் எந்தப்புரம் திரும்பினாலும் பின்பு அவ்விடமே நாயனின் முகமுண்டாயிருக்கிறது உண் மையாக நாயனாகிறவன் விஸ் தீரணமானவன் ஞானமுடை யவன்.

4. இன்னம் நாயன் பிள்ளையெ டுத்துக் கொண்டானென்று சொன்னார்கள் அவனே பரிசுத் தமானவன் எங்கிலும் வான லோகத்திலும் பூமியிலுமுள்ள வைகள் அவனுக்காயிருக்கும் எல்லாம் அவனுக்கே வழிபட் டதாயிருக்கின்றன.

5. வான லோகத்தையும் பூமி யையும் உண்டாக்குகிறவன் இன்னம்யாதொரு காரியத்தை செய்கிறபொழுது பின்பு உண் மையாக அதற்கு ஆயிவிடெ ன்றே சொல்வான் பின்பு அது ஆகிவிடும்.

6. இன்னம் அறியாதவர்கள் ஏன் நாயன் எங்களோடு பேச வில்லை அல்லது எங்களிடம் யாதொரு அத்தாக்ஷி கொண்டு வரவில்லை யென்று சொன்னார் கள் இதுபோலவே அவர்கள் சொல்லைப்போல் அவர்களுக்கு முன்னுள்ளவர்களும் சொன் னார்கள் அவர்களின் இருதயம்

---

மசூதி--பள்ளிவாசல்.

கியாமத்து--உலகமுடிவு நாள்.

ஆகிரத்து--மறுமை.

ஒன்றுக்கொன்று ஒப்பாயிவிட்டது உண்மையாக நாம் உறுதிகொள்ளுகிற ஜனங்களுக்கு அத்தாட்சிகளை விவரித்திருக்கிறோம்.

7. உண்மையாக நாம் உம்மை நிசமான சேதியைக்கொண்டும் சுபசேதிசொல்லுகிறவராகவும் அச்சம் பூட்டுகிறவராகவும் அனிப்பினேம் இன்னம் நரகத்திலிருப்பவர்களைத் தொட்டும் உம்மிடம் கேள்க்கப்படமாட்டாது.

8. இன்னம் எஹூதிகளும் நாஸாராக்களும் நீர் அவர்கள் மார்க்கத்தைத்தொயராதவரையில் உம்மைத்தொட்டும் ஒருபோதும் பொருந்தமாட்டார்கள் உண்மையாக நாயன் காட்டுகிற வழி அதுதான் நேரான வழியென்று சொல்லும் இன்னம் உம்மிடம் வந்திருக்கிற அறிவுக்குப்பின்னால் நீர் அவர்களுடைய இச்சையை அகத்தியம் தொயர்வீரானால்நாயனில் நின்றும் உமக்கு யாதொரு சிநேகிதனுமில்லை உதவி செய்கிறவனுமில்லை.

9. எவர்களுக்கு நாம் வேதத்தைக்கொடுத்தோமோ அவர்களாகிறவர்கள் அதன் வாசிக்கிறதின் தகுதிப்படி அதை வாசிக்கிறார்கள் அதைக்கொண்டு அவர்கள் ஈமான் கொள்கிறார்கள் இன்னம் எவர்கள் அதைக்கொண்டு காபிறாகிறார்களோ பின்பு அவர்களாகிறவர்கள் அவர்கள்தான் நஷ்டத்தைப் பெற்றுக்கொள்கிறவர்கள்.

15. ரு. 1. யாக்கோபின் புத்திரர்களே நான் உங்கள்பேரில் செய்த என் பாக்கியத்தை நினைத்துப்பாருங்கள் இன்னம் உண்மையாக நான் உங்களை உலகத்தாரின்பேரில் வருசையாக்கினேன்.

2. இன்னம் ஒரு நாளை பயந்துகொள்ளுங்கள் ஒரு உயிர் மற்றொரு உயிரைத் தொட்டும் கொஞ்சமும் பிரயோஜனமாகாது இன்னம்அதில் நின்றும்வதிலை ஒப்புக்கொள்ளப்படமாட்டாது இன்னம் அதற்கு மண்டாட்டம் பிரயோசனமாகாது இன்னம் அவர்களுக்கு உதவி செய்யப்படமாட்டாது.

3. இன்னம் எப்பொழுது இபுறாஹீமை அவருடைய நாயன் சில வார்த்தைகளைக் கொண்டு சோதித்தானே பின்பு அவர் அவைகளை பூரணமாக்கினர் உண்மையாக நான் உம்மை மனிதர்களுக்குகுருபீடமாக்குவேனென்று சொன்னான் என்

குருபீடம்—இமாம்

மக்களிலுமென்று சொன்னார் அனியாயகாரர்கள் என் வார்த்தைப்பாட்டை பெற்றுக் கொள்ள மாட்டார்களென்று சொன்னான்.

4. இன்னம் எப்பொழுது இந்த வீட்டை மனிதர்களுக்கு மீளும் தானமாகவும் கார்மானமானதலமாகவும் ஆக்கினோமோ இன்னம் இபுராஹீமின் தானத்தில் தொழுகையின் தானத்தை பிடித்துக் கொள்ளுங்கள் மேலும் இபுராஹீம் இன்னம் இஸ்மாயீலிடத்தில் என்வீட்டை தவாபு செய்கிறவர்களுக்கும் அதில் தரிபடுகிறவர்களுக்கும் ருக்கூசுஜூது செய்கிறவர்களுக்கும் பரிசுத்தமாக்கி வைக்க நாம் வாக்குவாங்கியிருக்கிறோம்.

5. இன்னம் எப்பொழுது இபுராஹீம் நாயனே இந்த பட்டணத்தை கார்மானமானதானமாக்கு இன்னம் அதிலுள்ளவர்களுக்கு எவர்கள் அவர்களில் நின்றும்நாயனைக்கொண்டும் இன்னம் கடைசி நாளைக்கொண்டும் ஒப்புக்கொண்டார்களோ அவர்களுக்கு பழவர்க்கங்களில் நின்றும் புசிப்பைக் கொடுவென்று சொன்னரோ இன்னம் எவன் காபிரானனோ பின்பு அவனுக்கு சொற்ப பிரயோஜனத்தைக் கொடுத்து பின்பு அவனை நெருப்பின்வேதனையின்புறம் தேள்வையுள்ளவனுக்குவேன் இன்னம் மீளும் தானும் கெட்டதென்று சொன்னான்.

6. இன்னம் எப்பொழுது இபுராஹீம் இன்னம் இஸ்மாயீல் இந்த வீட்டுக்கு அஸ்திவாரம் எழுப்பிக் கொண்டிருந்தார்களோ எங்கள் நாயனே எங்களில் நின்றும் ஒப்புக்கொள்ளு உண்மையாக நீயாகிறவன் கேள்கிறவனுக அறிகிறவனுகயிருக்கும்.

7. எங்கள் நாயனே இன்னம் எங்களை உனக்கு வழிப்பட்டவர்களாகவும் எங்கள் பிச்சளத்தில் நின்றும் ஒரு கூட்டத்தை உனக்கு வழிப்பட்டவர்களாகவும் செய்தருள் இன்னம் எங்களுக்கு நாங்கள் ஹஜ்ஜு செய்யும் விதத்தைக் காட்டியருள் இன்னம்எங்கள்பேரில்பொருத்தருள் உண்மையாக நீயாகிறவன் பொறுப்பவனும் கிருபை செய்புமானவனுமிருக்கும்.

8. எங்கள் நாயனே இன்னம் அவர்களில் அவர்களில் நின்றுமே அவர்கள்பேரில் உன் அத்தாட்சிகளை வாசிக்கவும் அவர்களுக்கு வேதத்தையும்

---

ஸுஜூது—சாஷ்ட்டாங்கம்.

தவாபு—சுத்திவருகிறது.

ஹஜ்ஜு—மக்காவின் தீர்த்தம்.

நல்ல அறிவுகளையும் கற்பிக்கவும் அவர்களை பரிசுத்தமாக்கவும் ஒரு ரெசூலை யெழுப்பிவை உண்மையாக நீயாகிறவன். வலுப்பமானவன் பூராயமுடையவன்.

16. ரு. 1. இன்னம் எவன் தன்சுயத்தில் மடையனுயிருக்கிருனே அவனைத்தவிர இபுராஹீமுடைய மார்க்கத்தைக் கொண்டும் எவன் பிரியப்படமாட்டான் இன்னம் அவசியம் சந்தேகமின்றி உலகத்தில் நாம் அவரைத்தெரிந்தெடுத்திருக்கிறோம் இன்னம் உண்மையாக அவராகிறவர் மறுமையில் அகத்தியம் நல்லவர்களில் நின்றுமாயிருக்கிறார்.

2. எப்பொழுது அவருடைய நாயன் அவருக்கு வழிப்படென்று சொன்னானோ உலகத்தாரைக்காப்பாற்றுகிற நாயனுக்கு வழிப் பட்டேனென்று சொன்னார்.

3. மேலும் இபுராஹீம்இன்னம் யாக்கோபு தம்மக்களுக்கு அதைக்கொண்டு வஸியத்துச் செய்தார்கள் ஓமக்களே உண்மையாகநாயனாகிறவன் உங்களுக்கு இந்த மார்க்கத்தைத் தெரிந்துகொண்டான் ஆகையால் இன்னம் நீங்கள் இஸ்லாமானவர்களாகவே தவிர அகத்தியம் சாகவேண்டாம்.

4. யாக்கோபுக்கு மரணம் வந்தபொழுது நீங்கள் முன்னிருந்தீர்களா எப்பொழுது தம்மக்களுக்கு எனக்குப்பின் எதை வணங்குவீர்களென்று சொன்னாரோ ஒரே நாயனாகிய உம்முடைய நாயனையும் உம்முடைய தகப்பமார் இபுருஹீம் இன்னம் இஸ்மாயீல் இன்னம் இஸ்ஹாக்குடைய நாயனையும் வணங்குவோம் இன்னம நாங்கள் அவனுக்கு வழிப்பட்டவர்களாயிருக்குமென்றுசொன்னார்கள்.

5. இது ஒரு கூட்டம் நிட்சயமாக சென்று விட்டது அவர்கள் சாமார்த்தியம் செய்தது அவர்களுக்கு இன்னம் நீங்கள் சாமாத்தியம் செய்தது உங்களுக்கு மேலும் அவர்கள் செய்ததைக்கொண்டுநீங்கள் கேள்க்கப்பட மாட்டீர்கள்.

6. இன்னம் எகுதியாகஅல்லது நாஸாராவாக ஆயிவிடுங்கள் நேர்வழி பெருவீர்கள் என்று சொன்னார்கள் எங்கிலும் ஒரே நாயனை வணங்கும் இபுராஹீமுடையமார்க்கத்தைச் சொல்லிக்காட்டும் இன்னம் அவர் இணை வைக்கிறவர்களில் நின்றுமுள்ளவரல்ல.

7. நாங்கள் அல்லாவைக்கொண்டும் இன்னம எங்கள் பாரிசம்

---

வஸியத்து—கடைசியான உபதேசம்,

74
8-23

இறக்கப்பட்டதைக்கொண்டும் இன்னம் இபுராஹீம் இஸ்மாயில் இஸ்ஹாக்கு யாக்கூபு அவர் மக்களின் பாரிசம் இறக்கப்பட்டதைக்கொண்டும் இன்னம் மூசாவுக்கும் ஈசாவுக்கும் கொக்கப்பட்டதைக்கொண்டும் இன்னம் எல்லா நபிமார்களுக்கும் அவர்கள் நாயனில்நின்றும்கொடுக்கப்பட்டதைக்கொண்டும் ஈமான்கொண்டோம் அவர்களில் நின்றும் ஒருவருக்கிடையிலும் நாங்கள் வித்தியாசப்படுத்தமாட்டோம் இன்னம்நாங்கள் அவனுக்கு வழிப்பட்டவர்களாயிருக்குமென்று சொல்லுங்கள்.

8. பின்பு அவர்கள் நீங்கள்ஈமான்கொண்டுவந்தது போலதை கொண்டு ஈமான்கொண்டுவருவார்களானால்பின்பு நிச்சயமாக அவர்கள்நேர்வழிபெருவார்கள் இன்னம் திரும்பிவிடுவார்களானால்பின்பு உண்மையாக அவர்கள்வீரோதத்திலேயேயிருக்கிறார்கள் ஆகையால் இனி அவர்களைக்கொண்டு நாயன் உமக்கு போதுமாயிருக்கும் இன்னம் அவனாகிறவன் கேள்க்கிறவன் அறிகிறவனாயிருக்கும்.

9. நாயனுடைய நிறங்கொள் இன்னம் நாயனைவிடயாருடைய நிறம் அதிகமேலானது இன்னம் நாங்கள் அவனுக்கே வணங்குகிறவர்களாயிருக்கும்.

10. நாயனிடத்தில் எங்களோடு வாதாடுகிறீர்களா இன்னம் அவனாகிறவன் எங்களுக்கும் உங்களுக்கும் நாயனாகும் இன்னம் எங்கள் செயல் எங்களுக்கும் உங்கள் செயல் உங்களுக்குமாயிருக்கும் இன்னம் நாங்கள் அவனுக்கே பரிசுத்தமானவர்களாயிருக்குமென்று சொல்லும்.

11. நீங்கள் திட்டமாக இபுராஹீமும் இஸ்மாயீலும் இஸ்ஹாக்கும் யாக்கோபும் அவர் மக்களும் எஹூதியாக அல்லது நாஸாராவாக யிருந்தார்களென்று சொல்லுகிறீர்களா நீங்கள் மிகுதம் தெரிந்தவர்களா அல்லது நாயனாவென்று சொல்லும் இன்னம்நாயனிடத்தில் நின்றும் தன்னிடமிருக்கிறசாட்சியை மறைத்தவனைக் காணயார்பெரிய அனியாயக்காரன் இன்னம் நாயன் நீங்கள் செய்கிறதைத் தொட்டும் மறதியுடையவனல்ல.

12. இது ஒரு கூட்டம் நிச்சயமாக சென்று விட்டார்கள் அவர்கள் சாமாத்தியம் செய்தது அவர்களுக்கும் நீங்கள் சாமாத்தியம் செய்தது உங்களுக்கும் இன்னம் அவர்கள் செய்ததைத்தொட்டும் உங்களை கேள்க்கப்படமாட்டாது.

The City Press.
PRINTERS,
TANJORE.